கொடுக்கிற வலவர் பயிற்சியோடு, மெக்கானிக் பயிற்சியையும் சேர்த்து கால அளவைக் கூட்டி, பயிற்சி கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? இப்போது திருச்சியிலும், சென்னையிலும்தான் இந்தப் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தில் தான் அதிகமான அளவில் பர்மா அகதிகள் இருக்கிற காரணத்தினுல் திருநெல்வேலியிலும் இப்படிப்பட்ட ஒரு பள்ளியை அரசாங்கம் அமைக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதிலே பயிற்சி பெற்ற வர்கள் எங்கெங்கே வேலையில் இருக்கிருர்க்ள் என்ற கணக்கு இல்லை.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோருக்கு வீட்டு வசதி

*216. வினு—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) இலங்கையில் இருந்து வரும் அகதிகளுக்காக "வியாசர் பாடியில்" வீடுகள் கட்ட தமிழக அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) & (இ) இலங்கை யில் இருந்து வரும் அகதிகளுக்காக "வியாசர்பாடியில்" வீடு கட்ட தமிழக அரசுக்கு உத்தேசம் இல்லை. பர்மா அகதிகளுக்குத்தான் இருக்கிறது. எனவே இவ்வினு எழாது.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அவர்களுக்காக எவ்வளவு வீடுகள் கட்ட உத்தேசம்? அதற்காக எவ்வளவு தொகை மாநில அரசும், மத்திய அரசும் கொடுக்கவிருக்கிறது? மத்திய அரசிடமிருந்து எவ்வளவு தொகை கேட்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அம்மையார் தொகுதியான வியாசர்பாடியில் அவர்களாக வீடுகள் கட்டிக்கொண்டார்கள். பல வசதிக் குறைவான இடத்தில் 2,500 பர்மா அகதிக் குடும்பங்கள் எந்த விதமான அடிப்படை வசதிகளும் இல்லாத அளவில் அவர் களுக்கு பலன் அளிக்கின்ற வகையில் போதிய பாதைகள், விளக்குகள் சாதாரண சுகாதார ஏற்பாடுகள் செய்வதற்கு தமிழ் நாடு அரசாங்கம் 3 கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டம் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அதோடு கூட ரூபாய் 24 லட்சம் சாதாரண சுகாதார வசதியையும் (பேசிக் அமெனிடிஸ்) செய்வதற்கு திட்டம் தயாரித்து அனுப்பி இருக்கிறது. அந்த 3 கோடி ரூபாயில் 50 சதவிகிதம் ரூபாய் மானியமாகவும், 50 கோடி ரூபாய் கடனுகவும் அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிருேம். இது மத்திய அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ம. பொ. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, பர்மாவிலிருந்து அகதிகளாக வருகின்ற தமிழ் குடும்பங்களுக்கு சென்னை மாநகரத்தில் இடவசதி இல்லை என்பதன் காரணமாக அவர்களைத் தாளவாடி, ஒதூர் பகுதியில் குடியேற்ற அரசு ஆலோசிக்குமா?

1970 செப்டம்பர் 3]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அங்கங்கே இருக்கிற பிரச்சினையைப் பொறுத்து குடியேற்றும் நிலைமைகள் இருக்கின்றன. பர்மா அகதிகளுக்கு அங்கு வாய்ப்பு இருக்குமானால் யோசனை செய்யலாம்.

திரு. கே. விநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, வியாசர் பாடியிலே மிகவும் தாழ்வான இடத்திலேதான் வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். உண்மைதான். சென்னையிலே மிகவும் இட நெருக்கடி இருக்கிறது. அதனால் எங்கெங்கே இடம் இருக்கிறதோ அங்கெல்லாம் கட்டிக்கொள்ளுகிறார்கள். மத்திய சர்க்காரிடம் இருந்து பணம் வந்தால் அதைக் கார்ப்பரேஷனிடம் கொடுத்தால் பல நாட்கள் ஆகும். முதலிலே அவர்களுக்கு ரோடுகள் வேண்டும், பிறகு வீடுகள், அதற்குப் பிறகு குடிநீர் வசதி ஆகியவைகளைச் செய்து கொடுக்க வேண்டும். இவைகள் "இன்டர் மிக்ஸட் பிராப்ளம்". ஆகவே, இதை பி.டபிள்யூ.டி.-யிடம் கொடுத்தால் 2 அல்லது 3 ஆண்டுகளுக்குள்ளாக முடித்துவிடுவார்கள். இப்படிப் பட்ட யோசனை இந்த அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அங்கே திரு. விநாயக மூர்த்தி, இங்கே திரு. விநாயகம். அவர்கள் என்னவென்றால் அரசாங்கம் கார்ப்பரேஷனிலே தலையிடுகிறது என்கிறார்கள். இவர்கள் என்னவென்றால் கார்ப்பரேஷனிடம் கொடுக்காதே என்று சொல்லுகிறார்கள். கார்ப்பரேஷன் மட்டுமல்ல இதைச் செய்வது. எல்லோரும் சேர்ந்து செய்யவேண்டிய பிரச்சினை. நான் டெல்லி சென்றிருந்த நேரத்திலே டெல்லி அமைச்சர் திரு. பகூஷா ஆசாத் அவர்களைச் சந்தித்துப் பேசினேன். அவர்தான் இத்துறையின் பொறுப்பில் இருக்கிறார்கள். இந்த 3 கோடி ரூபாய் கிடைக்கக் கூடிய நிலைமை இருக்கிறது என்பதிலே எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

கோவை மாவட்டத்தில் விதைப்பண்ணைகள்

*217. வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் தற்போது எத்தனை அரசாங்க விதைப் பண்ணைகள் உள்ளன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கோயம் புத்தூர் மாவட்டத்தில் தற்போது 6 அரசு விதைப் பண்ணைகள் உள்ளன.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 6 விதைப் பண்ணைகளில் எவ்வளவு விதைகள் சேகரிக்கப்பட்டிருக் கின்றன? இந்த விதைப் பண்ணைகளை அதிகரிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, இந்த 6 விதைப் பண்ணைகளிலிருந்து எவ்வளவு சேகரிக்கப் பட்டிருக்கிறது என்ற விவரம் இல்லை. ஆறு விதைப் பண்ணைகளும்